**எல்லை நிர்ணய ஆணைக்குழு**
**2019 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை**
**2019 ஏப்ரல் 01 முதல் 2019 ஜூன் 30 வரை**

## 1.0 பின்னணி

தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ மற்றும் 95(1) ஆம் உறுப்புரைகளுக்கு இணங்க, 2015.11.13 ஆம் தேதி தாபிக்கப்பட்டது. அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழு தவிசாளர் கலாநிதி கே. தவலிங்கம், அங்கத்தினர்களாகிய கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க மற்றும் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லா ஆகிய மூவரை உள்ளடக்கியதாகவிருந்தது. 2018.08.24 ஆம் தேதி பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் மரணமடைந்தார். 2015.11.13 ஆம் தேதி நியமனம் செய்யப்பட்ட ஆணைக்குழுவின் பதவிக்காலம் 2018.11.13 ஆம் தேதி முடிவடையவிருந்தமையால் அன்றிலிருந்து மூன்று ஆண்டுகள் காலம் வரை தவிசாளராக கலாநிதி கே.தவலிங்கம் அவர்களும் அங்கத்தினர் ஒருவராக கலாநிதி திருமதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க அவர்களும் மீண்டும் நியமனம் செய்யப்பட்டதோடு, வெற்றிடமாகக் காணப்பட்ட அங்கத்தினர் பதவிக்கு 2019.03.11ஆம் தேதி திரு. ஏ.எம் நஹியா நியமனம் செய்யப்பட்டார்.

அரசியலமைப்பின் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைககளினால் ஆணைக்குழுவின் பிரதான பணிகள் விளக்கப்பட்டுள்ளன. எது எவ்வாறாயினும் ஏனைய ஆணைக்குழுக்கள் தொடர்பாக போன்றன்றி எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அரசியலமைப்பில் அல்லது பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்தில் குறிப்பிடப்படவில்லை.

- ஆணைக்குழுவின் பணிகள்
- ஆணைக்குழுவின் தத்துவங்கள்

ஆரம்பத்தில் அரசியலமைப்பு சபையினால் உணர்த்தப்பட்ட கருத்து யாதெனில், புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுகின்ற பொழுது, தனியான எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றை நிறுவுவதும் அதன் பணிப் பொறுப்புக்களை விளக்குகின்ற போது அனைத்து புவியியல் எல்லை வரையறைகளையும் நிர்ணயிப்பதை விதிமுறைகளுக்கமைய மேற்கொள்வதுமே என்பதாகும்.

## 2.0 நோக்கு:-

நெறிமுறையானதும் நீதியானதுமான கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்யத்தகு உயர் நிலையை அடையப் பெறல்.

**பணிகள்-**: அரசியலமைப்பின் மூலம் அதிகாரம் கிடைக்கப் பெற்றுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும், வினைத்திறனுடனும், வெளிப்படைத் தன்மையுடனும், நம்பத்தகுந்த முறையிலும், சட்டத்திற்கிணங்கவும் எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ளல்.

**நோக்கங்கள்**

- ஒவ்வொரு வாக்காளருக்கும் அல்லது பிரசைக்கும் உயர் மட்டத்திலான சமத்துவ பிரதிநிதித்துவம் கிடைக்கத் தக்க விதத்திலும் மக்களின் சனநாயக உரிமைகள் மற்றும் அதற்கான சூழ்நிலை என்பவற்றை பாதுகாக்கத்தக்க விதத்திலும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கான தேர்தல் தொகுதிகள் மற்றும் ஏனைய நிர்வாக அலகுகளை எல்லை நிர்ணயம் செய்தல்
- தேர்தல் தொகுதிகள் அல்லது நிர்வாகப் பிரதேசங்கள் அல்லது கல்வி, சுகாதார அல்லது பாதுகாப்பு போன்ற சமூக - பொருளாதார சேவைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காக கையளிக்கப்படுகின்ற எல்லை நிர்ணயப் பணிகளை உரிய கால அட்டவணைக்குள் பூர்த்தி செய்தல்.
- அரசாங்கத்திற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் தமது தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான எல்லை நிர்ணயங்களின் போது உரிய அறிவையும் தகவல்களையும் வழங்குதல்.
- எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களை ஒன்று திரட்டுகின்ற ஒரு மத்திய நிலையத்தை உருவாக்குதல்.

.

## 3.0 கொள்கையளவிலான விடயங்கள்

### 3.1 அமுலாக்கல் திட்டம்

ஆண்டிற்குள் எதிர்பார்க்கப்பட்ட அரசியலமைப்புத் திருத்தம் நிகழவில்லை. ஆதலால் அமுலாக்கல் திட்டத்தை தயாரிக்கின்ற போது, சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் கீழ்வரும் செயலாற்றங்களை உள்ளடக்கிய 2019 ஆம் ஆண்டின் அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்டது (முதலாம் காலாண்டிற்குரிய அறிக்கையில் பின்னிணைப்பு 1 என்றவகையில் இணைக்கப்பட்டுள்ளது)

1. திட்டமிடலும் பயிற்சி யும்

2. தகவல்களை ஒன்று திரட்டல்.(நிர்வாக அலகுகள் மற்றும் உள்ளூர் அதிகார நிறுவனங்கள் என்பவற்றை நிறுவுவதோடு தொடர்புடைய அனைத்து வர்த்தமானி அறிவித்தல்களையும் ஒன்று திரட்டத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன)

3. இலங்கையின் நிகழ்கால சனத்தொகை மற்றும் காணிகள் தொடர்பான முந்துரிமையை அடிப்படையாக கொண்டு கடந்த பாராளுமன்றத் தேர்தல்களோடு தொடர்புடைய எல்லை நிர்ணய அறிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

4. நிர்வாக அலகுகளின் எல்லைகள் தொடர்பான ஆராய்ச்சி

5. உள்ளூர் அதிகார சபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான ஆராய்ச்சி

6. நிகழ்காலத்துக்கு பொருந்தக்கூடிய அறிக்கைகள் / சுவடிக் கூடமொன்றை தயார்படுத்தலும், ஆவணங்களின் மென்பிரதிகளை தயார்படுத்தலும்.

### 3.2 மாகாண சபைகளுக்கான தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்தல்

2017 ஆம் ஆண்டின் மாகாண சபை தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் 2017.09.20 ஆம் தேதி பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட்டது. 2017.10.04 ஆம் தேதி, ஜனாதிபதி அவர்களினால் இப்பணிக்காக எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளரும் இரு அங்கத்தினர்களும் இக்குழுவின் அங்கத்தினர்களாக நியமனம் செய்யப்பட்டனர். நிறைவு செய்யப்பட்ட அறிக்கை 2018.02.19 ஆம் தேதி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. அது 2018.03.06 ஆம் தேதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2018.08.24 ஆம் தேதி அவ்வறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் அது மீளாய்வுக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. இவ்வறிக்கை தொடர்பாக பாராளுமன்றம் எடுக்கின்ற அடுத்த நடவடிக்கை பற்றி எல்லை நிர்ணய ஆணைக்குழு அவதானத்துடன் இருக்கின்றது.

## 4.0 கடந்த மூன்று மாத காலத்திற்குள் செயலாற்றுகை

### 4.1 கூட்டங்கள்

**எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கூட்டங்கள்**:- இக்கால ஆண்டிற்குள் நிர்வாக மற்றும் கொள்கை ரீதியான விடயங்களை கலந்துரையாடுவதற்காக மூன்று கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

37 ஆம் கூட்டம் - 2019.04.02

38 ஆம் கூட்டம் - 2019.05.02

39 ஆம் கூட்டம் - 2019.06.14

### 4.2 எல்லை நிர்ணயம் மற்றும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகள் பற்றி மக்களை அறிவூட்டல்

எல்லை நிர்ணய தலைப்பு மற்றும் அதனோடு இடைநேர் விளைவான பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்களின் புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக செய்திப் பத்திரிகைகளுக்கு கட்டுரைகளை சமர்ப்பிக்கவும் ஆணைக்குழுவின் அங்கத்தினர்களின் வளவாளர் பங்களிப்போடு தொழில் வல்லுநர்களின் அமைப்புக்களின் அங்கத்தினர்களை அறிவூட்டவுமான அமர்வுகளை நடாத்த ஆணைக்குழு திட்டமிட்டிருக்கிறது.

இங்கு பிரதானமாக நில அளவைத் திணைக்களத்தின் பணியாட் குழுவினர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணியாட் குழுவினர், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கான பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன. நாட்டில் நிலவிய பாதுகாப்பு நிலைமை மற்றும் மாவட்ட நிருவாக அலுவலர்களின் வேலைப்பளு காரணமாக நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைப்பதில் பிரச்சினைகள் தோன்றின. ஆதலால் எதிர்பார்க்கப்பட்டவாறு அலுவலர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்த முடியாமல் போயிற்று.

ஆணைக்குழுவின் தவிசாளரும் இணைச் செயலாளரும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் **"புள்ளடியின் பலம்"** என்ற சஞ்சிகையின் பாகம்-3 ஜனவரி - ஏப்ரல் 2019, இதழுக்காக எல்லை நிர்ணயம் தொடர்பான கட்டுரையொன்றை சமர்ப்பித்தனர். தவிசாளரோடு எல்லை நிர்ணயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நேர்காணலொன்று 2019.06.12ஆம் தேதி சிலுமின செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

எல்லை நிர்ணயம் தொடர்பான பொதுமக்களின் புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க 2019.04.11, 2019.04.18 மற்றும் 2019.05.21 ஆகிய தினங்களில் Sunday Island, Sunday Times மற்றும் Daily Financial Times ஆகிய பத்திரிகைகளில் "Delimitation of Electoral Boundaries in Sri Lanka Small Electoral Units Needed to Serve the People Better" என்ற தலைப்பின் கீழ் மூன்றாம் கட்டுரை பிரசுரிக்கப்பட்டது. முதலாம் இரண்டாம் கட்டுரைகளின் சிங்கள மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டு முதலாம் கட்டுரை 2019.05.30 ஆம் தேதியன்றும் இரண்டாம் கட்டுரை 2019.06.27 ஆம் தேதியன்றும் லங்காதீப செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன.

இக்காலாண்டிற்குள் நான்காம் கட்டுரை Sunday Island, Sunday Times, Daily Financial Times ஆகிய செய்திப் பத்திரிகைகளில் Delimitation of Electoral Boundaries in Sri Lanka multi - member electorates Perceptions and Realities என்ற தலைப்பின் கீழ் 2019. 04.14, 2019.04.21 மற்றும் 2019.05.29 ஆகிய நாட்களில் பிரசுரிக்கப்பட்டது.

தற்போது காணப்படுகின்ற கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள சமநிலையற்ற தன்மை காரணமாக தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்து உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு சமர்ப்பித்தல் பொருத்தமானதென ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் நிலஅளவை அறிவியல் பாடநெறியைப் பயிலுகின்ற மாணவர் ஒருவரினால் தனது இறுதிக் கருத்திட்டமாக இலங்கையின் மாவட்டங்களின் எல்லைகளை அடையாளமிடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதோடு, அதன் மேற்பார்வைப் பொறுப்பை ஏற்குமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் கலாநிதி கே. தவலிங்கம் அவர்களிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்கருத்து எல்லை நிர்ணயம் தொடர்பான மிக முக்கியமான திருப்புமுனையொன்றாகக் கருதப்பட்டு ஆணைக்குழுவினால் அதற்கான உயர்ந்தபட்ச ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டுமென ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இணக்கம் கண்டுள்ளனர்.

## 5.0 நிர்வாக மற்றும் நிதி விடயங்கள்

### 5.1 எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கான அலுவலக வசதிகள்

2016 ஆம் ஆண்டிலிருந்து எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அலுவலகத்தை நிலஅளவைத் திணைக்களத்தில் வாடகைக் கொடுப்பனவு எதுவுமின்றி நடாத்திச் செல்வதற்கு நில அளவையாளர் நாயகம் இடமளித்துள்ளார்.

**தற்போதைய அலுவலக முகவரி**

எல்லை நிர்ணய ஆணைக்குழு
நில அளவையாளர் நாயக அலுவலகக் கட்டிடம்
த பெ..506
கொழும்பு 05

## 5.2 போக்குவரத்து பணிகள்

பொதுத்திறை சேரியினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு 2016 ஆம் ஆண்டில் இரண்டு வாகனங்கள் வழங்கப்பட்டன.CAP 7180 என்ற வாகனம் ஜனாதிபதியின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டு, அதே பெயரில் காப்புறுதி செய்யப்பட்டுள்ளதோடு, அது தவிசாளருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மோட்டார் வாகனம் CAR 0347 என்பது ஜனாதிபதி செயலாளர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாகனமே எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் அனைத்து போக்குவரத்து நடவடிக்கைகளுக்குமென தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

## 5.3 எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அலுவலர்களை நியமனம் செய்தல்

எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்படுகின்ற பணிகளின் பாரதூரமான தன்மையை கருத்திலெடுத்து, முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அவரது 2016.02.05 ஆம் தேதிய DMS/1029 ஆம் இலக்கக் கடிதத்தினூடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன,

| **பதவி** | **நிலை** | **பதவிகளின் எண்ணிக்கை** | **வேதனக் குறியீடு** |
|---|---|---|---|
| செயலாளர் | சிரேட்ட | 01 | SL-3-2006 |
| கணக்காளர் | .சிரேட்ட | 01 | SL-1-2006 |
| இணைப்புச் செயலாளர் | மூன்றாம் தர | 01 | பொ.நி.சு. 6/2006 |
| நிருவாக அலுவலர் | மூன்றாம் தர | 01 | MN-7-2006 |
| மொழிபெயர்ப்பாளர் | இரண்டாம் தர | 03 | MN-6-2006 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | இரண்டாம் தர | 02 | MT-1-2006 |
| அரச முகாமைத்துவ உதவியாளர்கள் | இரண்டாம் தர | 02 | MN-2-2006 |
| சாரதிகள் | ஆரம்ப | 02 | PL-3-2006 |
| அலுவலக உதவியாளர்கள் | ஆரம்ப | 02 | PL-1-2006 |
| மொத்தம் | | 15 | |

இக்காலாண்டுக்குள் கீழ்வரும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- பதில் கடமை செயலாளர்- திரு சமன் ஸ்ரீ ரத்நாயக்க:- 2019 மார்ச் 21ஆம் தேதி முதல் பதில்கடமை செயலாளரின் நியமனம் ஒரு வருடத்தால் நீடிக்கப்பட்டுளளது.
- பதில் கடமை கணக்காளர்- திரு. எச்.டபிள்யூ.என்.குமாரவின் பதவிக்காலம் 2019.03.31 ஆம் தேதியோடு முடிவடைந்ததுடன் 2019 ஏப்ரல் மாதம் 01 ஆம் தேதியிலிருந்து பதில் கடமை கணக்காளராக திரு. எஸ்.ரி புலத்சிங்ஹல நியமனம் செய்யப்பட்டார்.

இதற்கமைய 2019.06.30ஆம் தேதி அளவில் பணியில் ஈடுபட்டிருந்தோர் விபரம் வருமாறு

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட | நிரப்பப்பட்ட | வெற்றிடம் |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 01 [a] | - |
| கணக்காளர் | 01 | 01 [a] | - |
| இணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| நிர்வாக அலுவலர் | 01 | 01 | - |
| மொழிபெயர்ப்பாளர் | 03 | 0 | 03 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 0 | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 | 02 | - |
| சாரதி | 02 | 02 | - |
| அலுவலகப் பணி உதவியாளர் | 02 | 02 | - |
| மொத்தம் | 15 | 10 | 05 |

[a] பகுதி நேரம்

## 6.0. தீர்க்கப்படாத விடயங்கள்

எல்லை நிர்ணய ஆணைக்குழு தனது இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளின் அறிக்கைகள் வெளிப்படுத்திய தீர்க்கப்படாத விடயங்கள் தொடர்பாக பதிலுக்காகக் காத்திருக்கின்றது. அவையாவன:

1. தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்குரிய பணிப் பொறுப்புக்கள் விதிக்கப்படவில்லை. இதற்கிடையில் இலங்கையில் காணப்படுகின்ற நியதிச் சட்டங்கள், நடைமுறை ஒழுங்குவிதிகள் ஆகியவற்றினூடாக தேர்தல் தொகுதிகள் மற்றும் நிர்வாக மட்டத்திலான பல்வேறு எல்லை நிர்ணயங்கள் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, இவை மிகச்சிறந்த பிரதிபலனைத் தர வேண்டுமாயின், அவை அனைத்தும் உண்மையான முறையில் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. அத்தகைய நிலைமையை ஏற்படுத்தும் நோக்கோடு,

- 2016 ஜூலை மாதத்தில் "அரசியலமைப்பு திருத்தத்தினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப் பொறுப்புக்களை விரிவுபடுத்துதல்" என்ற தலைப்பில் கொள்கை முன்மொழிவொன்று அரசியலமைப்பு சபையின் தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

- அதே முன்மொழிவு அரசியலமைப்பு சபையின் செயற்பாட்டுக் குழுவின் அரசாங்க சேவை தொடர்பான பாராளுமன்ற உப குழுவின் செயலாளருக்கு, தவிசாளரினால் தயாரிக்கப்பட்ட "புதிய அரசியல் அமைப்பொன்று அல்லது அரசியலமைப்புத் திருத்தமொன்று உருவாக்கப்படுகின்ற பொழுது எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்" என்ற தலைப்பிலான பின்னிணைப்பொன்றுடன் கூடியதாக 2016 ஜூலை மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. இம்முன்மொழிவு உப குழுவின் கவனத்திற்கும் உள்ளாக்கப்பட்டது.

- புதிய அரசியலமைப்பொன்றை அல்லது புதிய அரசியலமைப்புத் திருத்தமொன்றைக் கொண்டு வருகின்ற போது கருத்தில் கொள்ளப்படுவதற்காக "இலங்கையின் எல்லை நிர்ணயத்துக்கான கோட்பாடுகளும் கொள்கை சட்டகமும்" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட ஒரு கடிதம் 2016 ஒக்தோபர் மாதத்தில் அதன் தவிசாளரான கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

எல்லை நிர்ணய ஆணைக்குழு இம்முன்மொழிவுகள் தொடர்பாக கிடைக்கப் போகின்ற பதிலுக்காக காத்திருக்கின்றது.

3. எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்காக சட்டமொன்றைத் தயாரிப்பதன் தேவைப்பாட்டுக்காக 2017.10.18 மற்றும் 2018.10.18 ஆகிய தினங்களில் ஜனாதிபதி அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கொள்கை விளக்கப் பத்திரம் மற்றும் அமைச்சரவைப் பத்திர வரைபு தொடர்பாக சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் பெறப்பட்டுள்ளன. அதற்கமைய எதிர்வரும் அரசியலமைப்புத் திருத்தமொன்றின்போது எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்குரிய சட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படுமென ஜனாதிபதியின் செயலாளரினால் PS / AC / CCU / 01 / 03 / 05 ஆம் இலக்க மற்றும் 2019.06.23 ஆம் தேதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.